4 நவம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 31ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவில் புனிதராவதற்கான அழைப்பு**

## தன்னையும் மிஞ்சிச் செல்வது

பெரும்பாலும் நாம் தனித்து வாழ விழைகிறோம். கணக்கிலடங்கா கனவுகளோடு, நமது சொந்த ஆசைகளைப் பூர்த்திச் செய்யும் பேரின்பத்தை நோக்கி அலைகிறோம். எப்படியாவது இன்பம் காண வேண்டுமென்பது நமது இறுதி நோக்கமாகவும் லட்சியமாகவும் இருக்கிறது. இந்த குறிகோளை அடையவதில் நம்மைத் தடுப்பவருக்கு கேடும் அவமானமும்தான் மிஞ்சும்.



ஆயினும், தமது சொந்த அவாவை நோக்கி செல்லும் பாதையில் மற்றவர்கள் தடைக்கல்லாக இருப்பார்கள். குறிப்பாக மற்றவர்களின் விருப்பத்தோடு நமது ஆசைகளும் மோதும் போது, முட்டுக்கட்டைக்கு இட்டுச் செல்வதோடு, உறவிலும் விரிசல் ஏற்படும். கணவன்-மனைவி, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சகாக்கள் ஏன் ‘கிறிஸ்துவர்கள்’ ஆகி நம்மிடையேயும் இது நிகழலாம். இம்மாதிரியான சூழ்நிலையில் கிறிஸ்துவ ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படும். ‘வளம் பெறும் நற்செய்தி’ ஊக்குவிக்கும் சுயநல உணர்வு இதனை இன்னும் மோசமாக்கும். பிரபலத்தையும் சுய கௌவரத்தையும் நாடும் சில திருச்சபை தலைவர்களும் இதற்கு பலியாகி விடுகின்றனர்

மத்தேயு 20:28 கூறுகிறது, கிறிஸ்து சேவை செய்யவே வந்தார், அனைவருக்காகவும் தமது உயிரையே தந்தார். ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் அவர் ஓர் எடுத்துக்காட்டு. நமது அன்றாட வாழ்க்கை போராட்டத்தில் அவர், நமக்குத் தடைக்கல்லாக இருக்கிறார். கிறிஸ்து காட்டும் வாழ்க்கைக்கு உழைப்பு, தியாகம், விடாமுயற்சி தேவைப்படுகிறது. வாழ்க்கையில் வரும் பிரச்னைகளுக்கு உடனடி தீர்வும் கிடையாது. அன்றாட வாழ்க்கையில் சிறிதளவு அறம் செய்ய பழகுவதன் வழி இதனை நாம் தொடங்கலாம். இது நம்பிக்கை ஏற்படுத்தும், மற்றவர்களுக்காக உயிரையே கொடுக்கும் அளவுக்கு இட்டுச் செல்லலாம். ஏன்னென்றால், கிறிஸ்துவ வாழ்வு வெறும் வார்த்தை ஜலமல்ல, அது விசுவாச வாழ்க்கை (1அருள.3:18- நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்).

இம்மாதிரியான விசுவாசத்தில் வாழ்ந்தால், நம்மை தம்மிடம் அழைத்துக் கொள்ளும் இயேசுவின் விருப்பத்தைப் புரிந்து கொள்ள முடியும். ‘நீர் இறையாட்சியினின்று தொலைவில் இல்லை’ மாற்கு 12:34 மறைநூல் அறிஞரிடம் கூறியது போல. கால ஓட்டத்திலும் வாழ்க்கை முறையிலும், மற்றவர்களோடு நமது வாழ்வு இணைக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். இதனால்தான், திருப்பலி இறுதியில், **‘சென்று வாருங்கள், பணிபுரிய’** எனக் கூறப்படுகிறது. அயலாருக்குக் காட்டும் அன்பு, கடவுளின் தியாக அன்புக்கு ஈடாக இருப்பதை நாம் உணரும் போது இதன் மகிமையை காண்போம். ✝

> **கிறிஸ்துவன் என அழைப்பதை விட, கிறிஸ்துவனாக இருக்க விரும்புகிறேன்.**
>
> - புனித லயோலா இன்னாசியார்

**வாரம் ஒரு வசனம்**

**‘சென்று வாருங்கள், பணிபுரிய’**

INTERNAL CIRCULATION ONLY
BUL 44/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**இயேசு கிறிஸ்துவை எனதாக்கிக் கொள்ள தொழுநோயாளிகளில் நானும் ஒரு தொழுநோயாளியானேன்.**

- புனித மொலோகை டெமியன்

உடம்பைப் பிடிக்கும் உடையும் முகமுடியும் அணிந்து வருபவர்களல்ல. தோம் மனகென், தமது டொமிநோ பிஷா வியாபாரத்தை 1 பில்லியன் அமெரிக்க டாலருக்கு விற்று, இளைஞர்களுக்கான கத்தோலிக்கப் பல்கலைக்கழகங்களையும் இதர கத்தோலிக்க நிறுவனங்களைக் கட்டுவதில் கவனத்தைச் செலுத்தினார் என்பதை அறிவீர்களாக! ‘கொடுக்க முடியும் கொடு’ எனக்கூறிய அன்னை திரேசாவை நினைவு இருக்கிறதா?

உண்மையில், நாம் ’ரோக்களைத் தேடி வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. உங்களில் பங்கில், சுற்றுவட்டாரத்தில் உங்களது சொந்த ’ரோக்களைத் தேடி பாருங்கள். கடவுள் மீதும் அயலார் மீதும் அன்பு காட்டும் பண்பு இருப்பவர்களைத் தேடி பாருங்கள், ’ரோக்கள் முளைத்து நிற்பார்கள். அவர்கள், சிறைச்சாலை பணித்துறைச் சேயைாற்றும் உங்கள் பங்கை சேர்த்த சகாவாக இருக்கலாம், அலுவலகத்திலும் வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு, உங்கள் சமூகத்திதலுள்ள ஏழை பிள்ளைகளுக்கு தொண்டூழியமாக படிப்புச் சொல்லித் தரும் இளம் தாயாக இருக்கலாம். இதர ’ரோக்களை எல்லாம் மிஞ்சியவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்பது மனதை நெகிழ வைக்கும்.

இம்மாதிரியான ’ரோக்கள் வழியாக சிலுவையில் இயேசு செய்த தியாகத்தைப் புரிந்து கொண்டு உணர முடிகிறது. யாரையும் வெறுக்காமல், அனைவருக்கும் அன்பு கரம் நீட்டுவதை இவை உறுதிச் செய்யும். மேலும் இம்மாதிரியான ’ரோக்களுக்கு பட்டமோ விருதோ வழங்கப்படுவதில்லை. அவர்களை யாரும் கண்டு கொள்வதுமில்லை, பாராட்டுவதுமில்லை. “மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்”(மத்.6:4) என கிறிஸ்து வாக்குறுதி அளிக்கிறார்.

எனவே, நீங்களும் ’ரோவாக ஓரளவு செயல்படுவத்றகு என்ன வேண்டும்...உங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்? உங்களின் அவசர உலக வேலையிலிருந்து விலகி, கடவுளின் மாட்சிமையை உணர்ந்து பாருங்கள், பின்னர் அதனை அவருக்கு அர்ப்பணித்து விடுங்கள். அந்த ஏழை பெண் தன்னிடம் இருக்கும் இரண்டு நாணயங்களையும் கொடுத்தது போல், “இதோ என் பங்கு” என நம்மால் துணிந்து கூற இயலுமா? செய்வதற்கு நிறைய இருப்பதால், நம்மைச் சுற்றியே வாய்ப்புக்ள உள்ளன. அதற்கு உடம்பைப் பிடிக்கும் உடையோ முகமுடியோ தேவையில்லை. **அன்பும் சேவையும் செய்வதற்கு இயேசுவைப் பின்பற்றினால் போதும்.** அதுவே போதுமானது. ✝

**வாரம் ஒரு வசனம்**

**அன்பும் சேவையும் செய்வதற்கு இயேசுவைப் பின்பற்றினால் போதும்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 45/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

11 நவம்பர் 2018

# Newtec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 32ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவில் புனிதராவதற்கான அழைப்பு**



# தலைவனாக இருப்பதற்கு

நம்மில் பெரும்பாலோர் நமக்குப் பிடித்த “ரோக்களை’ மனதில் நிறுத்திக் கொண்டு வளர்ந்திருப்போம். நமது வாழ்வில் பல்வேறு கட்டங்களில் குறிப்பிட்ட “ரோக்கள்’ நமது சிந்தனையையும் முடிவையும ஆட்கொள்பவர்களாக இருந்திருப்பார்கள். எனது இளைய மகன் இடைநிலை பள்ளிக்குச் செல்லும் கட்டத்திற்கு விரைவில் வரவிருக்கிறான். மிருகங்கள் மீது இருந்த அவனது ஆர்வம், இப்போது அதீதச் செயல் புரியும் ரோக்கள் மீது திரும்பியுள்ளது. எனக்கோ அன்றாட வாழ்க்கையில் ரோக்களாக இருப்பவர்களைக் கண்டு உற்சாகம் அடைந்து வருகிறேன். நான் உற்காசமடையும் ’ரோக்கள்,

> **கடவுள் நம்மோடு பயணிக்கிறார் என்ற உணர்வு மிஞ்சி நிற்கும்.**
>
> - புனித அவிலா திரேசா

போன்ற இதர சில சம்பவங்கள் உங்கள் உள்ளத்தில் பசுமையாக இருக்கும். உங்கள் மனைவி/கணவன், குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்கள் உடன் நடத்திய எண்ணற்ற வாக்குவாதங்கள் போனற் கசப்பான தருணங்களும் உண்டு.

காலங்கள் மாறுகின்றன, நாமும் மாறி விட்டோம். சக்கரம் போல் நமது வாழ்க்கை சுற்றிக் கொண்டே இருக்கிறது. அந்த பயணத்தில் ஒருசில அழகான, மகிழச்சியான தருணங்கள் நமது நினைவில் நீங்கா இடம் பிடித்துள்ளன. சில தருணங்கள் கஷ்டமானதாக இருந்திருக்கின்றன. பெரும்பாலான சமயத்தில் தனியாகவும் சில வேளையில் நல்லத்தொரு சகாவோடு இந்த பயணம் அமைந்திருக்கும். அந்த சகா நமது பெற்றோர், தாத்தா-பாட்டி, உறவினர் அல்லது நமது நண்பர்களாக இருந்திருக்கலாம். நீங்கள் சொல்வதற்கு முன்பே உங்களது வாழ்க்கை அடுத்தக் கட்ட நிலை என்ன என்பதை அறிந்திருக்கு உற்றச் சகா இருக்கலாம்.

நமது மகிழச்சி, வேதனை, பாசம், ஏமாற்றம் போன்ற எல்லா நிலையும் வாழ்க்கையில் நிரந்திரமல்ல. வேறுசிலரைக் காட்டிலும் சில உணர்ச்சிப்பூர்வமாக நிலைகள் நம்மோடு அதிக காலம் இருந்திருக்கலாம். சிலவற்றை நாம் பற்றிக் கொள்வதால், வேதனைத் தரும். கடந்த காலத்தை மாற்றி அமைக்கவும் முடியாது, பின்நோக்கி செல்லவும் முடியாது. ஆயினும், இவற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்கிறோம். அவை நம்மை சாதகமான அல்லது பாதகமான பாதிப்பைக் கொண்டு வரலாம். நாம் தேர்ந்தெடுத்தப் பயணம் அது.

வாழ்க்கைப் பயணம் பற்றிப் பேசும் போது இயேசு நமக்கு உறுதிமொழி வழங்குகிறார், பயணத்தில் செய்யும் காரியங்கள், முடிவை நிர்ணயிக்கும். வாழ்க்கையில் நாம் செய்யுமு முடிவுகள், நமது இறுதி இலக்கை நிர்ணயம் செய்யும். நாம் அவரோடு அல்லது அவரில்லாமல் இருப்போமா என்பதை. ஆனால் நமக்கு அவர் கொடுக்கும் வாக்குறுதி, நமது வாழ்க்கைப் பாதையில் நம்மோடு இருப்பார், நம்மோடு நடப்பார். நம் மீது கடவுள் கொண்டுள்ள அன்பு நிரந்திரமானது என்பதால் இந்த வாக்குறுதி மாறாது. **அனைத்தும் மாறும் அவரது அன்பு மாறாது.**

அவரோடு நடக்க ஒப்புக்கொண்டால், வழி தவறியவர்களையும் எளியவர்களையும் கடையர்களையும் இட்டுச் செல்லும் பாதையை அவர் காட்டுவார். அந்த பாதை நித்திய வாழ்வை சுதந்திரத்துக் கொள்ளும் பாதை, இயேசுவைப் போல் மற்றவர்களுக்கு உயிர் தியாகம் செய்யும் பாதை. உலகம் ஒரு நாள் அழியும், நாம் தனியாக நடப்பதில்லை என்பதால் அது பற்றி நாம் கவலைக் கொள்ளத் தேவையில்லை. ✝

**வாரம் ஒரு வசனம்**

**அனைத்தும் மாறும் அவரது அன்பு மாறாது.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 46/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

18 நவம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 33ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவில் புனிதராவதற்கான அழைப்பு**

# சொன்னதை செய்வது

“வாழ்க்கை என்பது டொய்லட் பேப்பர் மாதிரி, முடியும் போது வேகமாக உருளும்” என்ற ஆங்கில முதுமொழி உண்டு. நாம் கவனியாத சமயத்தில், நாமே நினையாத சமயத்தில், வாழ்க்கை கடந்து போய் விட்டது என நமது வாழ்வில் உணரும் வேளையை இந்த முதுமொழியோடு ஒப்பிடலாம். உங்கள் பட்டமளிப்பு விழா, வேலையின் முதல் நாள், உங்கள் கல்யாண நாள், உங்கள் முதல் குழந்தையை கையில் ஏந்திய நாள், பள்ளிக்கூடத்திற்கு சென்ற முதல் நாள்

> **அனைத்திற்கும் மேலானவர் ஆண்டவர்: வேறொன்றும் சொல்வதற்கில்லை.**
>
> - புனித பெட்ரிக்

இயேசுவிற்கென நேரத்தை ஒதுக்குவது இக்காலத்தில் வழக்கமாக இருந்தாலும், அது சுமையாக கருதப்படுகிறது. முடிந்தால் அதனை கைவிட விரும்புகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் திருப்பலியில் கலந்து கொள்வது அல்லது கத்தோலிக்கக் கடைமைகளை நிறைவேற்றுவது போன்ற செயல்களால் தங்களது பணி முடிந்து விட்டது என சிலர் கூறிக்கொள்கின்றனர். இதற்குமேலும் கடவுள் எதனையும் எதிர்பார்க்கக்கூடாது? “நீ யூதரின் அரசனா?” என இயேசுவைப் பார்த்து பிலாத்து கேட்டது போல் இருக்கிறது இது. தமது உலகம் வேறு, யூதர்களின் உலகம் வேறு; அவர்களின் பிரச்னை வேறு, தமது பிரச்னை வேறு என பிலாத்து பிரித்துக் கொண்டார். இயேசுவிற்கு எனக்கு நேரமில்லை என்று சொல்லும் போது அவ்வாறே நாமும் இயேசுவிடமிருந்து நம்மை பிரித்து வைத்துக் கொள்கிறோம். இயேசுவிற்காக உண்மையிலேயே நாம் நேரத்தை ஒதுக்கிறோமா?

காணிக்கை செலுத்துவதில் கணக்குப் பார்த்த காயினைப் போல் இயேசுவுடனான நமது உறவிலும் கணக்குப் பார்க்கிறோம். இயேசு, யூதர்களின் அரசன் மட்டுமல்ல, நமக்கும் அரசர். நமது உயிர்வாழ்வின் ஆண்டவர் அவர். நமதனைத்தும் அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஏனெனில் நமது வாழ்வே அவருக்குச் சொந்தமானது. இயேசு தமது அரசர், நமது சகோதரர், நமது வேதனையையும் இன்பத்தையும் புரிந்து கொள்பவர், நம்மோடு பகிர்ந்து கொள்பவர். நமக்காக தமது உயிரே அளித்த உன்னத அரசர் அவர். எனவே இயேசுவுடனான நமது உறவில், அவரை நாம் தேர்ந்து கொண்டோமா? காயினைப் போல நமது பழைய மனநிலையைத் தொடர்ந்து வைத்திருக்கிறோமா? பிலாத்துவைப் போல் இயேசுவிடமிருந்து நமது வாழ்வைப் பிரித்து வைத்திருக்கிறோமா? அல்லது இயேசு நமது அரசர், நமது வாழ்நாள் முழுவதும் அவரது ஆட்சி என ஏற்றுக்கொள்கிறோமா? உங்களுக்கும் எனக்கும் **இயேசு கிறிஸ்து உங்களுக்கும் எனக்கும் உண்மையான அரசரா?** ✝

**வாரம் ஒரு வசனம்**

**இயேசு கிறிஸ்து உங்களுக்கும் எனக்கும் உண்மையான அரசரா?**

INTERNAL CIRCULATION ONLY
BUL 47/2018
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

25 நவம்பர் 2018

Newbec
NEW WAY OF BEING CHURCH
கிறிஸ்து அரசர் பெருவிழா
எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவில் புனிதராவதற்கான அழைப்பு**

# கிறிஸ்து அரசர் பெருவிழா




அகிச கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு நேரமில்லை அல்லது ஓய்வில்லாமல் உழைக்கிறோம் அல்லது குடும்பத்திற்குப் பின்தான் ஆலயம் என பிறர் சொல்வதை எத்தனை முறை நாம் கேட்டிருக்கிறோம். நாம் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளா விட்டாலும் சரி, இக்காலத்தில் இதுவே நடைமுறை வழக்கமாகி விட்டது. நமது விசுவாசத்தில் நாம் அக்கறை கொள்கிறோமா? இந்த விசுவாசத்தைக் கட்டிக்காக்க ஒரு நாளில் எவ்வளவு நேரத்தை ஒதுக்கிறோம்? நமது வாழ்வில் கிறிஸ்து அரசராக இருக்கிறாரா அல்லது அவரில் நாம் அரசராக இருக்கிறோமா?

Image: ©123rf.com